1982 ஏப்ரல் 7]

### E. S. I. மருத்துவமனை உதவித் திட்டத்தை ஆரல்வாய்மொழி கூட்டுறவு ஆலைக்கு நீட்டிக்கும் திட்டம்.

*வினா எண். 786—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற E.S.I. மருத்துவமனை உதவி திட்டத்தில் ஆரல்வாய்மொழி கூட்டுறவு ஆலையை உட்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி புறநகர் பகுதிகளுக்கு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டித்து 5—8—81-ம் நாளன்று அரசு ஆணையிட்டுள்ளது. இப்புறநகர் பகுதிகளில், ஆரல்வாய்மொழியில் செயல்பட்டுவரும் கூட்டுறவு நூற்பு ஆலை உள்ளடங்கியதாகும். மருத்துவம் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் மருத்துவ வசதிகள் அளிப்பதற்குரிய முன்னேற்பாடுகளை தற்போது முடித்துள்ளார். திட்டம் செயல்படுத்துவதற்குரிய மைய அரசின் அறிக்கை வெளியிடக்கோரி, புதுடெல்லியிலுள்ள தொழிலாளர் ஈட்டுறுதி கழகம் அணுகப்பட்டுள்ளது. அவ்வறிக்கை வெளியானதும் திட்டம் செயல்படும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில் பணியாற்றுகின்றவர்களில் சிலோனிலிருந்து தமிழகத்திற்கு வந்திருக்கின்ற நம்முடைய அகதிகளுக்கு அந்த நூற்பாலையில் இடம் ஒதுக்கப்படவில்லை. எனவே, அந்த இடர்ப்பாடுகளை நீக்கி அவர்களுக்கும் அந்த இடத்திலே இடம் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிக்கு என்று ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகின்றபோது அங்கு உள்ள எல்லோருக்கும் கான்ட்ரிபூஷன் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்லுகிறார் என்று எனக்குச் சரியாகப் புரியவில்லை. அப்படி ஏதாவது செயல்படுத்தப்பட்டப் பகுதியில் எந்தத் தொழிலாளர்களாவது விடப்பட்டிருக்கிறார்கள் என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றித் தெரிவித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்கும்.